செ.வெ.எண்:762 **பத்திரிக்கை செய்தி** நாள்: 21.11.2020.

உலக NSV தினம் 21.11.2020 - இரு வார விழா ( 21.11.2020 முதல் 04.12.2020 வரை)

ஆண்டு தோறும் உலக NSV தினம் நவம்பர் 21ம் தேதி அனுசரிப்பது வழக்கம். அதே போன்று இந்த ஆண்டும் அனுசரிப்பதற்கு இந்திய அரசம் தமிழ்நாடு அரசும் அறிவுறை வழங்கியதன் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் சிறப்புடன் அனுசரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## ஆண் கருத்தடை சிகிச்சையின் சிறப்பு அம்சங்கள்:

ஆண் கருத்தடை சிகிச்சை பாதுகாப்பானது. எளிய முறையில் சில நிமிடங்களில் செய்யப்படுகிறது. பக்க விளைவுகள் கிடையாது. மருத்துவமனையில் தங்க வேண்டிய அவசியம் இல்லை. நம்பிக்கையானது. தழும்பு இல்லாதது. தையல் இல்லாதது. ஆண்மைக் குறைவு ஏற்படாது. கடின உழைப்பிற்கு தடையில்லை. இது ஒரு 100% நிரந்தரமான கருத்தடை ஆகும்.

இதனை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் கீழ்கண்ட இடங்களில் முகாம்கள் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

| வ.எண் | தேதி | முகாம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 1 | 25.11.2020 | அரசு ஆரம்ப சுகாதார நிலையம்-வல்லம் |
| 2 | 27.11.2020 | அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மெலட்டூர் |
| 3 | 04.12.2020 | அரசு மருத்துவமனை, பட்டுக்கோட்டை |

மேற்கண்ட முகாம்களில் தகுதி உள்ள ஆண்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்க NSV ரதம் மூலம் ஒலிபெருக்கியைக் கொண்டு விளம்பரம் செய்திடவும், துண்டு பிரசுரங்கள், விளம்பர பேனர்கள் வழியாக விழிப்புணர்வு பிரச்சாரம் செய்யப்படுகிறது.

இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொண்டு மேற்கண்ட முகாம்களில் தகுதி வாய்ந்த ஆண்கள் அதிக அளவில் பங்கு பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

21/11

துணை இயக்குநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
மற்றும் குடும்ப நலம்
தஞ்சாவூர்

மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்